ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் - 282) Nov (2) / 2018



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஶ்ரீரங்கநாதோ ஜயது ஶ்ரீரங்கஶ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ........................................................................................3

2. ஶ்ரீபாஷ்யம் ...........................................................................................5

3. ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ...........................................................................12

4. ஆசார்ய ஹ்ருதயம்.......................................................................................14

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்).......................................................................26

6. இராமாநுச நூற்றந்தாதி.....................................................................................33

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 102)

57. ஆதாராந்மூர்த பர்யந்தம் போக்தாரம் வர்ணமுந்நயேத்
விஸ்ருஜேந்முகதோ வர்ணம் த்விதீயம் போக்ய ஸம்ஜ்ஞகம்
58. ஸர்வா ஸ்ருஷ்டி: க்ருதா தேந ஹம்ஸோச்சார ப்ரயோகத:
அஜபேயம் ஸமாக்யாதா வித்யா ஸர்வாங்கசோபநா
59. சது: ஷஷ்ட்யாதிகாசீதி கோடி ஸம்க்யாஸு யோநிஷு
தத் பேதேஷு ச மந்த்ரோ அயம் ஸ்வயம் உச்சரதே ஸதா

**பொருள்** – “ஹ(ம்)” என்னும் அக்ஷரமானது ஆதார ஸ்தானத்திலிருந்து (மூலாதார இடமான நாபிக்குக் கீழிருந்து), மூர்த்ந இடத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டும். இதனைத் தொடந்து இரண்டாவது அக்ஷரமான “ஸ” என்பது வாய் வழியாக வெளியேற வேண்டும். இவ்விதம் “ஹம்ஸ” என்னும் உச்சரிப்பிலிருந்து அனைத்து ஸ்ருஷ்டிகளும் மீண்டும் உண்டாக்கப்படுகின்றன. எந்த ஒரு வித்யை அனைத்து அங்கங்களுடன் கூடியதாக உள்ளதோ அது அஜபேயம் எனப்படும். இந்த மந்த்ரமானது ப்ரபஞ்சத்தில் உள்ள 84 லக்ஷம் வகையான உயிரினங்களால் தானாகவே உச்சாடனம் செய்யப்பட்டபடி உள்ளது.

60. நிச்வாஸேந ஸமம் வித்யா ஸமுதேத்யந்த: உஜ்ஜ்வலா
உதயாஸ்தமயாவஸ்யா: ச்வாஸ நிச்வாஸ துல்யகௌ

**பொருள்** - இந்த வித்யையானது உள்ளே வளர்ந்தபடி இருந்து, தானாகவே மூச்சு வழியாக மேலே எழும்புகிறது. இதன் வெளிப்படுதல் மற்றும் மறைதல் என்பது மூச்சை உள்ளிழுத்தல் மற்றும் வெளியே விடுதல் என்பது போன்று உள்ளது.

61. ஷஷ்டி: ச்வாஸ பவேத் ப்ராணா: ஷட் ப்ராணா நாடிகா மதா
நாட்ய: ஷஷ்டிஹோராத்ரமேவம் காலக்ரியாகதி:

**பொருள்** – ப்ராணனில் அறுபது சுவாசங்கள் உள்ளன. ஆறு ப்ராணன்கள் ஒரு நாடி ஆகும். அறுபது நாடிகள் ஒரு இரவு மற்றும் பகல் ஆகும். இதுவே காலத்தின் பகுப்பாக உள்ளது.

62. ஏவம் ஹம்ஸோதயாத்வித்தி ஸஹஸ்ராண்யேக விம்சதிம்
சதாநி ஷட் ச தேவேச தாவந்த: ஸ்யுர்ஜபா: க்ருதா:

**பொருள்** - இவ்விதமாக இந்த "ஹம்ஸ" மந்த்ரத்தை வெளிப்படுத்துதல் என்பது எந்தவொரு மந்த்ரத்தையும் 21, 600 முறை உச்சாடனம் செய்த சக்தியை உண்டாக்கும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

## ஶ்ரீபாஷ்யம்

(பகுதி – 282)

**1-3-39 ஸ்ம்ருதேச்ச**

**பொருள்** – ஸ்ம்ருதியிலும் கூறப்பட்டது.

**ஸித்தாந்தம்** – அவர்கள் வேதங்களைக் கேட்பதைத் தடுத்தலை, ஸம்ருதியிலும் காணலாம். கௌ. ஸூ. (12-3) - அத ஹாஸ்ய வேதமுபச்ருண்வத: த்ரபுஜதுப்யாம் ச்ரோத்ர ப்ரதிபூரணம் உதாஹரணே ஜிஹ்வாச்சேதோ தாரணே சரீரபேத: - என்றும், மநு. (4-80) – நச அஸ்ய உபாதிசேத்தர்மே ந ச அஸ்ய வ்ரதம் அதிசேத் - அவனுக்கு எந்தவிதமான தர்ம உபதேசமும் செய்தல் கூடாது, எந்த வ்ரதம் குறித்தும் கூறக்கூடாது - என்றும் கூறப்பட்டது. ஆகவே இதன் மூலம், அவர்களுக்கு (ப்ரஹ்மவித்யையில்) அதிகாரம் இல்லை என்று தேறுகிறது.

ஒரு சிலர் (அத்வைதிகள்), “நிர்விசேஷ சிந்மாத்ர ப்ரஹ்மம் மட்டுமே உண்மையானது. ப்ரஹ்மத்தைத் தவிர உள்ள மற்ற அனைத்தும் மித்யை ஆகும்; ஸம்ஸார பந்தமும் அபாரமார்த்தமே (உண்மையற்றது) ஆகும்; இத்தகைய பந்தமானது வேதவாக்கியங்களால் ஏற்படும் ஞானத்தின் மூலம் அடையப்படும் வஸ்துவைக் குறித்த உண்மையான ஞானம் மூலம் மட்டுமே விலகும்; இத்தகைய விலகுதலே மோக்ஷம் ஆகும்”, என்று கூறுகிறார்கள். இவர்களால், சூத்ரர்களுக்கும் மற்றவர்களுக்கும், ப்ரஹ்மஞானத்தை பெறுவதற்கான அதிகாரம் இல்லை என்று கூறுவதற்கு இயலாது. (ஏனென்றால் இவர்கள் கருத்தின்படி) ஒருவனுக்கு உபநயனம் ஆகவில்லை என்றாலும், அவன் வேத அத்யயனம் செய்யவில்லை என்றாலும், வேதாந்த வாக்கியங்களைக் கேட்டதில்லை என்றாலும், அவன் யார் மூலமாகவாகிலும், “நிர்விசேஷ சிந்மாத்ர ப்ரஹ்மமே உண்மையானது,

ப்ரஹ்மத்தைத் தவிர்த்து உள்ள மற்ற அனைத்தும் ப்ரஹ்மத்தின் மீது கற்பனை செய்யப்பட்ட மித்யை" போன்ற வாக்கியங்களைக் கேட்டவுடன், அவனுக்கு அந்த ப்ரஹ்மவஸ்து குறித்த உண்மையான ஞானம் உள்ளது உள்ளபடி உற்பத்தியாகி, ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையும் ஏற்பட்டுவிடும். மேலும், ஒருவனுக்கு சாந். (6-8-7) - தத் த்வம் அஸி – நீயே அதுவாகிறாய் – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம் மட்டுமே ஞானம் உற்பத்தி ஆகும் என்றும், மற்ற வாக்கியங்களால் ஆகாது என்றும் கூற இயலாது; காரணம், ஞானம் ஏற்படுதல் என்பது புருஷனுடைய கையில் இல்லை; ஏனென்றால் ஒரு மனிதனுக்கு ஞானம் உற்பத்தியாகும் சூழ்நிலை அமைந்தால், அவனுக்கு அந்த ஞானத்தை அடைவதில் விருப்பம் இல்லையென்றாலும், அது அவனுக்கு உற்பத்தி ஆகிவிடும்.

மேலும் வேதவாக்கியங்கள் மூலம் மட்டுமே வஸ்துவைக் குறித்த உண்மையான ஞானம் ஏற்படுகிறது என்றும், அதனால் ஸம்ஸார பந்தம் விலகுகிறது என்றும் கூறமுடியாது; காரணம், மற்ற வாக்கியங்கள் மூலமாகவும், வஸ்துவைக் குறித்த உண்மையான ஞானம் ஏற்பட்டு, அவித்யை விலகக் கூடும்; உதாரணமாக நீங்கள் (அத்வைதி) கூறுவது போன்று, "நிர்விசேஷ சிந்மாத்ர ப்ரஹ்மமே உண்மையானது, ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற அனைத்தும் மித்யை" என்பது போன்ற வாக்கியங்களை, ஒரு மனிதன் உரைப்பதைக் கேட்டாலும் (உங்கள் கருத்தின்படி) ஞான உற்பத்தி ஏற்படும்; இதன் மூலம் அவித்யை விலகிவிடும்.

மேலும், நம்பிக்கைக்குரிய ஒரு மனிதன் கூறும் வாக்கியமான, "இது வெள்ளி அல்ல, முத்துச்சிப்பியே ஆகும்" என்பதன் மூலம், முத்துச்சிப்பியை வெள்ளியாக எண்ணியிருந்த பிழையான கருத்தானது, அந்தணன் போன்றே சூத்ரனுக்கும் விலகுகிறது; இதே போன்று, வேதங்களை நன்கு அறிந்தவர்களுடைய வாக்கியங்களைக் கேட்பதன் மூலமே, சூத்ரனுக்கு வஸ்துவை (ப்ரஹ்மம்) குறித்த உண்மையான ஞானம் ஏற்பட்டு, அதன் காரணமாக இந்த ஜகத்தைக் குறித்த மயக்கமும் விலகக்கூடும்.

(அடுத்து அத்வைதிகளுடைய ஸித்தாந்தத்தின்படி) மநு. (4-80) - ந ச அஸ்ய உபாதிசேத் தர்மம் – அவனுக்கு தர்மசாஸ்த்ரத்தை உபதேசித்தல் கூடாது - என்பது

போன்று வரிகளை அடிப்படையாகக் கொண்டு, ஶூத்ரர்களுக்கு வேதம் அறிந்தவர்கள் உபதேசம் செய்வதில்லை என்று கூற முடியாது; ஏன்? காரணம், (அத்வைத கருத்தின்படி[1]) வேதம் அறிந்தவர்கள், சாந். (6-8-7) - தத் த்வம் அஸி - நீயே அதுவாகிறாய் – என்பது போன்ற பலவற்றையும் அறிந்ததன் விளைவாக, ப்ரஹ்மத்தைத் தங்கள் ஆத்மாவாக கொண்டுள்ளதை அறிந்துள்ளனர்; இந்தக் காரணத்தால், தாங்கள் வேதத்தின் உச்சியில் (அதாவது வேதாந்தம்) அமர்ந்துள்ளதாக எண்ணிக் கொள்கிறர்கள்; இதன் விளைவாக, இவ்விதம் தடை செய்கின்ற சாஸ்த்ரங்கள் (மேலே உள்ள மநு ஸ்ம்ருதி வாக்கியம் போன்றவை) எதுவும் தங்களைச் சிறிதும் கட்டுப்படுத்தாது என்று கூறுகிறார்கள். இப்படியாக வேதவிதிகளுக்குக் கட்டுப்படவேண்டிய அவசியம் அற்ற சிலரால், ஶூத்ரர்களுக்கு ஞானம் ஏற்படக்கூடும்.

அடுத்து, முத்துசிப்பியை வெள்ளி என்று மயங்கிய நேரத்தில், நம்பத்தகுந்தவர்களால் கூறப்பட்ட உண்மையை விளக்கும் வாக்கியம் மூலம் அந்த மயக்கம் நீங்குவது போன்று, மேலே கூறப்பட்டவர்களால் (வேதம் அறிந்தவர்கள்) கூறப்படும் உண்மையை விளக்கும் வாக்கியம் மூலம் சூத்ரனுக்கு இந்த ஜகத்தைக் குறித்த மயக்கம் விலகுவதில்லை என்று நீங்கள் (அத்வைதி) கூறமுடியாது; இவ்விதம் கொண்டால், அந்தணனுக்கும் கூட, சாந். (6-8-7) - தத் த்வம் அஸி – போன்ற வாக்கியங்களால், ஜகத்தைக் குறித்த மயக்கம் விலகாமல் இருக்கலாம் அல்லவோ?

இதற்கு மறுப்பாக நீங்கள் (அத்வைதி), “தொடர்ந்த த்யானம் மூலம் மட்டுமே அவித்யையின் வாசனை (அதாவது பேத வாசனை - ப்ரஹ்மமும் ஜீவாத்மாவும் வெவ்வேறு என்ற சிந்தனை) விலகுகிறது. அதன் பின்னரே, சாந். (6-8-7) – தத் த்வம் அஸி – போன்ற வாக்கியங்கள், அறியாமையை விலக்கும் ஞானத்தை ஏற்படுத்துகின்றன (இதனால்தான் அந்தணர்களுக்குக் கூட மயக்கம் தெளியாமல் உள்ளது)”, என்று கூறலாம். அப்படியென்றால், நம்பத்தகுந்த மனிதனின் வாக்கியம்

---

[1] இங்கு அத்வைதிகளில் ஒருவராகிய சுரேச்வராசார்யர் என்பவர் தனது நைஷ்கர்ம்யஸித்தியின் நான்காம் அத்யாயத்தில் கூறுவதான “ப்ரஹ்மத்தைக் குறித்து அறிந்தவன் எந்த விதிகளுக்கும் அடிமை அல்லன்” என்பதைக் கூறுகிறார்.

மூலம் சூத்ரனுக்கும் அதே போன்ற ஞானம் ஏற்படலாம்; இந்த இரண்டிற்கும் வேறுபாடு இல்லை அல்லவோ? தொடர்ச்சியான இடைவிடாத த்யானம் (நிதித்யாஸநம்) என்பது, ப்ரஹ்மாத்ம பாவத்தை (அதாவது ப்ரஹ்ம ஆத்ம ஒற்றுமையை) கூறும் வரிகளால் உணர்த்தப்படும் கருத்தைச் சிந்தித்தபடி உள்ளதாகும்; இதற்கு மாறாக உள்ள எண்ணத்தை (ப்ரஹ்ம ஆத்ம ஒற்றுமைக்கு மாறாக) விலக்குவது, இத்தகைய த்யானம் (நிதித்யாஸம்) மட்டுமே ஆகும். இதன் காரணமாகவே நீங்கள் (அத்வைதி), “இப்படிப்பட்ட த்யானத்தை விதிக்கும் விதியானது, காணக்கூடிய பலனை அளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது”, என்று கூறுகிறீர்கள். வேத அத்யயனம் என்பது (ப்ரஹ்ம ஞானத்தை ஏற்படுத்தாமல்), ப்ரஹ்மத்தைக் குறித்த ஞானம் பெறவேண்டும் என்ற விருப்பத்தை மட்டுமே உணடாக்குகிறது. இப்படிப்பட்ட விருப்பமானது, (வேத அத்யயனம் செய்யாமல் வேறு ஏதோ ஒருவிதத்தில்) சூத்ரனுக்கும் ஏற்படலாம். அதன் பின்னர், த்யானம் (நிதித்யாஸநம்) மூலம் அவனுக்கு அத்வைத வாசனைகள் (அல்லது பேத வாசனைகள்) அனைத்தும் விலகி, நம்பத்தகுந்தவர்களுடைய உண்மையை விளக்கும் வாக்கியங்கள் மூலம் ஞானம் உற்பத்தியாகி, அதன் விளைவாக உண்மையற்றதான ஸம்ஸார பந்தமும் விலகுகிறது என்று கூறலாம் அல்லவோ?

அல்லது இந்தக் கருத்தை (அத்வைதிகளுடைய கருத்தை) வேறுவிதமாகவும் உரைக்கலாம். தர்க்கத்தின் துணையுடன் அமைந்துள்ளதான ப்ரத்யக்ஷம், அநுமானம் போன்றவை மூலமாக, ஸூத்ரர்களும் மற்றவர்களும், “நிர்விசேஷமானதும் ஸ்வயம்ப்ரகாசமானதும் சிந்மாத்ரமாக உள்ளதும் ஆகிய ப்ரத்யக் வஸ்துவானது (அதாவது உள்ளே இருக்கின்ற உண்மையான வஸ்துவாகிய ப்ரஹ்மம்), அஜ்ஞானத்திற்கு சாக்ஷியாக உள்ளது (அவித்யையால் பீடிக்கப்பட்டுள்ளது); இந்த அவித்யையின் காரணமாக, அறிபவன் மற்றும் அறியப்படும் பொருள் என்பதான பலவிதமான விசித்ரமாக உள்ள வேறுபாடுகள் நிறைந்த ரூபம் கொண்டதான ஜகத்தானது, அந்த ப்ரஹ்மத்தின் மீது ஏற்றிக் கூறப்படுகிறது; அத்தகைய ப்ரஹ்மமானது, பரிசுத்தமானதாகும்”, என்பது போன்றவற்றை அறிகிறார்கள்.

அதனைத் தொடர்ந்து, அந்த ப்ரத்யகாத்ம வஸ்துவைக் குறித்து இடைவிடாத த்யானத்தைக் கைக்கொண்டு (அல்லது எப்போதும் சிந்தித்தபடி இருந்து; இதனை அநவரதம் என்பர்), அதன் விளைவாக அவர்களுடைய விபரீத வாசனைகள்[2] அனைத்தும் அழிகின்றன. அதன் பின்னர் அவர்கள், ப்ரத்யக் வஸ்துவை நேரடியாகவே உணர்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஸம்ஸார பந்தத்திலிருந்து மோக்ஷம் கிட்டுகிறது. இவ்விதம் மோக்ஷம் கிட்டுவதால், "எண்ணற்ற விசேஷங்களுடன் கூடியது, இந்த உலகத்துடன் ஸம்பந்தம் அற்றது, விசித்ரமான ஐச்வர்யத்துடன் கூடியது, விசித்ரமான ஸ்ருஷ்டிகளை ஏற்படுத்துவது" என்று ப்ரஹ்மத்தைக் குறித்து எல்லையற்ற பொய்யான கருத்துக்களை வேதாந்த வாக்கியங்கள் கூறுவதால், அந்த வாக்கியங்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்றாகிறது. இதன் விளைவாக, ஶூத்ரர்களுக்கும் மற்றவர்களுக்கும் மட்டுமே, ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உள்ளது என்பது பொருந்துகிறது. (இவ்விதம் அத்வைதிகள் கூறுவதால், நிகழ்வது என்ன என்பதை இராமாநுசர் கூறுகிறார்) இதே ந்யாயத்தின் அடிப்படையில், அந்தணர்களுக்கும் ப்ரஹ்மத்தைக் குறித்த ஞானம் ஏற்பட்டுவிடும்; இதன் காரணமாக, உபநிஷத்துக்களுக்கு ஜலம் விட்டு இறுதிக்கடன்கள் செலுத்தும் நிலை உண்டாகும் (அதாவது உபநிஷத்துக்களால் பயன் இல்லை என்றாகிவிடும் என்கிறார்).

இதற்கு நீங்கள் (அத்வைதி), "இந்த உலகில் காணப்படும் பல்வேறு செய்கைகள் மற்றும் இயல்பாகவும் ப்ரமை கொண்டு அலைந்தபடி உள்ள ஒருவன், மற்றொருவனிடமிருந்து, 'இந்த லோகத்தில் நடைபெறும் அனைத்தும் ப்ரமையே ஆகும். உண்மையான வஸ்து என்பது இப்படிப்பட்டது' என்பது போன்ற விஷயங்களைக் கேட்கிறான். இதன் விளைவாக அவனுக்கு ப்ரத்யக்ஷம், அனுமானம் முதலானவை மூலம் பெறுவதான ஞானத்தை அடைதற்கான இச்சை ஏற்படுகிறது. இத்தகைய 'மற்றொருவன்' என்பது ச்ருதிகளாகவே உள்ளன. ஆகவே ச்ருதிகளை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்" என்று ஆக்ஷேபம் செய்யக்கூடும்.

(இதற்கு இராமாநுசர் மறுப்பு கூறுகிறார்) இதனை ஏற்க முடியாது; இவ்விதம் கூறுவது சரியல்ல. ஏன்? இவ்விதம் ஸம்ஸாரம் போன்ற பலவற்றால் அச்சத்தில்

---

[2] விபரீத வாசனைகள் - தவறுதலாக அறிவதற்குக் காரணமாக இருக்கக்கூடியவை

ஆழ்ந்துள்ள ஒருவனுக்கு, ஸாங்க்யம் போன்ற மதங்கள், ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானம் மூலம் மட்டுமே உண்மையான வஸ்து இன்னது என்று நிரூபணம் செய்கிறார்கள். இப்படியாக, ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானம் ஆகியவற்றையே அறிவதற்குத் துணையாகக் கொண்டு (வேதங்கள் அல்லாமல்), இத்தகைய அறியும் ஆசை தூண்டப்பப்பட்டுகிறது. இவ்விதம் இச்சை ஏற்பட்டவுடன், (ச்ருதியைக் காட்டிலும்) வேறுபட்ட தன்மைகள் கொண்டதான ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானம் மூலம் மட்டுமே - எந்த ஒரு வஸ்து நித்யமோ, சுத்தமானதோ, ஸ்வயம் ப்ரகாசிக்கின்றதோ, இரண்டாவது என்று ஏதும் இல்லாமல் உள்ளதோ (அத்விதீயம்), மாறாமல் உள்ளதோ, சைதந்யமோ, அத்தகைய வஸ்து மட்டுமே உண்மையானது (ஸத்) என்றும், மற்ற அனைத்தும் அந்த வஸ்து மீது (கற்பனையாக) ஏற்றிக் கூறப்பட்டதாகும் என்றும் – உணர்த்தப்படுகிறது (ஆக மேலே கூறிய ஆக்ஷேபத்தில் கூறியபடி, ச்ருதிகள் அவசியமானவை என்பது பொருந்தாமல் போகிறது).

மேலும், (அத்வைதிகளான உங்கள் கருத்தை ஏற்றால்), இவ்விதம் மேலே கூறப்பட்ட ஸ்வயம்ப்ரகாசமான வஸ்துவிற்கு உள்ள எந்த எந்த ஒரு குணத்தையும் ச்ருதியின் மூலம் அறிய இயலாது என்றாகிவிடும்; ஏனென்றால் உங்கள் (அத்வைதி) கருத்தின்படி, ச்ருதியானது ப்ரஹ்மத்தின் மீது ஏற்றிக் கூறப்படுகின்ற அனைத்தையும் விலக்கும் தன்மை கொண்டதாகும். மேலும், ஸத் என்பதான ஆத்மாவின் ஆனந்தரூபம் குறித்த ஞானத்தைப் பெறுவதற்கு, உபநிஷத்துக்கள் தேவையாக உள்ளன என்று நீங்கள் (அத்வைதி) கூறுவதையும் ஏற்கமுடியாது; ஏனென்றால், அது சித் ரூபமாக உள்ளதாலேயே, மற்ற அனைத்திலிருந்தும் வேறுபட்டதாக உள்ளதால், இயல்பாகவே ஆனந்தரூபமாக உள்ளது (இதனைத் தனியாக வேறு ஒன்றின் மூலம் அறியவேண்டிய அவசியம் இல்லை).

(இராமாநுசர் தனது கருத்தைக் கூறுகிறார்) மாறாக, நம்மைப் போன்ற ஒரு சிலருடைய கருத்து என்னவென்றால் - மோக்ஷ ஸாதனமாக வேதாந்த வாக்கியங்களில் உபதேசிக்கப்படும் ஞானமானது, உபாஸனை வடிவமாகவே உள்ளது. இத்தகைய உபாஸனையானது பரப்ரஹ்மமாகிய பரமபுருஷனை மகிழ வைப்பதாகவே உள்ளது. இவ்விதம் மகிழ வைப்பதற்கான முறைகளும்,

சாஸ்த்ரங்களால் மட்டுமே அறியப்பட வேண்டியதாக உள்ளது. இத்தகைய உபாஸனை சாஸ்த்ரங்கள் என்பவை, உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்களுக்குப் பின்னரே செய்யப்படுகின்றன. மேலும் அந்தச் சாஸ்த்ரங்கள், வேத அத்யயநம் முதலானவற்றால் பிறந்ததும், விவேகம் மற்றும் விமோகம் போன்றவற்றால் உதவப்படுவதும் ஆகிய ஞானத்தையே, தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவல்ல ஸாதனமாகக் கொள்கின்றன (அல்லது இந்த ஞானம் மூலமே, உபாஸனை சாஸ்த்ரங்கள் முழுமை அடைகின்றன). இப்படிப்பட்ட ரூபம் கொண்டதான உபாஸனை மூலம் மகிழ்ச்சி அடையும் புருஷோத்தமன், தனது உபாஸகனுக்கு ஆத்மாவைக் குறித்த உண்மையான ஞானத்தைத் தானம் செய்கிறான்; இதன் மூலமாக அவனுடைய கர்மத்தால் அவனுக்கு ஏற்படுகின்ற அறியாமையை அழிக்கிறான்; தொடர்ந்து அவனை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்கிறான் - என்பதே நாங்கள் கூறும் கருத்தாகும். இந்தக் கருத்தானது அவர்களுக்கு (ப்ரஹ்மவித்யையில்) அதிகாரம் இல்லை என்று கூறுவதற்குப் பொருத்தமாக அமைகிறது.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 282)

## அறிந்தே செய்யும் பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்யாத சில ப்ரபந்நர்களுக்குத் தண்டனை இல்லை என்பதன் கருத்து

**மூலம்** – ஸாபராதருமாய் அநுதாபமுமின்றிக்கே புந: ப்ரபத்தியும் பண்ணாதேயிருப்பார் சில ப்ரபந்நர்க்கு உபக்லேசங்களாகச் சொன்ன காணத்வாதி த்ருஷ்ட ப்ரத்யவாயங்கள் காணாதிரா நின்றோமென்கை மந்தசோத்யம். அவர்களுக்கும் அபராதாதி தாரதம்யத்துக்கு நாநாப்ரகார தாபத்ரய அநுபவம், உபயுக்த ஜ்ஞாநமாந்த்யம், இங்குள்ள பகவதநுபவ ரஸ ஸங்கோச விச்சேதங்கள், பகவத் பாகவத கைங்கர்ய ரஸ விச்சேதம், பகவதபசார பாகவதாபசாராதிகள், சிஷ்டகர்ஹாபஹிஷ்காராதிகள், ஸுக்ருத விசேஷ நாசம், ஸாத்த்விகாநாதரம், மநோரத பங்க க்லேசம் என்றிப்புடைகளில் ஏதேனுமோர் உபக்லேச ரூபமான ப்ரத்யவாயம் காணலாம். அக்ருத்யகரண க்ருத்யாகரணாதி ரூபங்களான நாநாவித பாபங்களுக்கு இப்படி நாநாவித த்ருஷ்ட ப்ரத்யவாய கரத்வமும் ச்ருதிகளிலும் மந்வாதி தர்மசாஸ்த்ரங்களிலும் இதிஹாஸ புராண பகவச்சாஸ்த்ராதிகளிலும் ப்ரஸித்தம். ஆகையால் காணத்வாதி உபக்லேச விசேஷ உதாஹரணமும் உபலக்ஷணமென்னுமிடம் வாக்யோபக்ரமத்தில் ஸமுதாய நிர்தேசாதிகளாலே ஸித்தம்.

**விளக்கம்** – ஒரு சில ப்ரபந்நர்கள் மிகுந்த அபராதங்களைச் செய்பவர்களாக, அதனைக் குறித்து எந்தவிதமான வருத்தமும் அடையாதவர்களாக, அதற்காக எந்தவிதமான ப்ராயச்சித்த ப்ரபத்தியும் செய்யாமல் உள்ளபோதிலும், அவர்களுக்கு சாஸ்த்ரங்கள் கூறும் தண்டனைகளாக உள்ள கண்கள் குருடாகுதல் முதலான

எதுவும் நேராமல் உள்ளனரே என்னும் கேள்வியானது மந்தமான ஒன்றாகும். அவர்களுக்கும் பாபங்களுக்கு ஏற்றபடியாக வாழ்க்கையில் பலவிதமான துன்பங்கள், பகவத் கைங்கர்யத்திற்குத் தேவையான ஞானம் குறைதல், பகவானை அனுபவிப்பதில் குறைவு உண்டாகுதல் அல்லது அனுபவம் ஏற்படாமல் விலகுதல், பகவானுக்கும் பாகவதருக்கும் கைங்கர்யம் செய்யும் ஈடுபாடு நீங்குதல், பகவத் மற்றும் பாகவத அபசாரங்கள் உண்டாகுதல், உயர்ந்தவர்களால் பழித்துத் தள்ளப்படுதல், நன்மையானவற்றின் அழிவு, நல்லவர்களால் தள்ளப்படுதல், விருப்பங்கள் நிறைவேறாமல் இருத்தல் என்பதான விதங்களில் தண்டனை ஏற்படவே செய்யும். செய்யக்கூடாதவற்றைச் செய்தல், செய்யவேண்டியதைச் செய்யாமல் இருத்தல் முதலான வடிவங்களில் உள்ளதான பலவிதமான பாபங்களுக்கு, இவ்விதமாகப் பலவிதமான தண்டனைகள் உள்ளதை ச்ருதிகளிலும், மநுதர்மம் போன்ற தர்ம சாஸ்த்ரங்களிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும், பாஞ்சராத்ர ஆகமங்களிலும் காணலாம். ஆகவே ச்ருதிகளில், “கண்கள் குருடாகுதல்” முதலான தண்டனைகள் குறித்துக் கூறப்படும் வாக்கியங்களுக்கு முன்பாகவே “இவர்களுக்கு தண்டனைகள் உண்டாகும்” என்று பொதுவாகக் கூறுவதால், “கண்கள் குருடாகுதல்” முதலான தண்டனைகளும் இங்கு எடுக்கப்பட்டன என்றே கொள்ளவேண்டும்,

அறிந்து செய்ததும், ப்ராயச்சித்தம் செய்யப்படாததும் உண்டான பாபத்தால் நேரிடும் துன்பங்களை கர்மபலன் என்று கூறக்கூடாது

**மூலம்** – வசந பல ஸித்தமாய் புத்தி பூர்வ உத்தராக பலமான உபக்லேச வர்க்கத்தைப் ப்ராரப்த கர்ம விசேஷ பலமென்று நிஷ்கர்ஷிக்க விரகில்லை. இவை யதா ஸம்பவம் உபயவித கர்மத்தாலும் வரும். ஆகையாலேயிறே புத்தி பூர்வ உத்தராகத்துக்கு ஸாத்விகர் அஞ்சிப்போருகிறது. இங்ஙனல்லாதபோது புந:ப்ரபத்தி விதாயக சாஸ்த்ரமும் அப்படிக்கு சிஷ்டாநுஷ்டாநமும் பூர்வ ஸம்ப்ரதாயமும் விரோதிக்கும்.

**விளக்கம்** – ப்ரபந்நர்கள் தங்களுடைய புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களால் உண்டாகும் பலன்கள் அனைத்தும், அவர்களுடைய “பலன் அளிக்கத்

தொடங்கிவிட்ட பூர்வகர்மங்கள்” என்று உறுதியாகக் கூறுவதற்கு எந்தவிதமான ப்ரமாண ஆதாரங்களும் இல்லை. இவை இந்த இரண்டுவிதமான கர்மங்களாலும் உண்டாகலாம். இந்தக் காரணத்தால்தான் ஸாத்விகமான தன்மை கொண்டவர்கள் புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களுக்கு அஞ்சுகிறார்கள். இவ்விதம் கொள்ளவில்லையென்றால், மீண்டும் ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தம் செய்வதை விதிக்கும் சாஸ்த்ரங்களும், அவ்விதம் செய்பவர்களுடைய செயல்களும், இதுவரை இதனைப் பின்பற்றி வந்த வழக்கங்களும் முரணாகிவிடும்.

அபராதங்கள் செய்தபடி உள்ளபோதிலும், அதற்காக மனவருத்தம் கொள்ளாத ப்ரபந்நர்கள் குறித்து நஞ்ஜீயர் கூறுவதன் கருத்து

**மூலம்** – அபசாராநந்தரம் அநுதாபம் பிறந்ததில்லையாகில் ஞானம் பிறந்ததில்லையாகக் கடவதென்ற நஞ்ஜீயர் வார்த்தைக்கும் அநுதாபம் பிறவாதவருடைய ஞானமாந்த்யத்திலே தாத்பர்யம். லோபாதிகளான பகவதபிப்ராய பேதங்களுக்கு ஈடாக வரும் புத்திபூர்வாபசாரம் சிலர்க்குப் பிறவாது; சிலர்க்குப் பிறந்தவை அநுதாபாதிகளாலே கழியும்; கடின ப்ரக்ருதிகளுக்கு அநுதாபம் பிறவாது. ஆகையால் புத்தி பூர்வ உத்தராகம் பிறந்தால் அநுதப்தனாய்ப் புந:ப்ரபத்தி பண்ணாதபோது உபக்லேசம் சொல்லுகிற ச்ருத்யாதிகளின் கட்டளையிலே லகு ப்ரத்யவாயத்தாலே தீரும்.

விவேகாநாம் ப்ரபந்நானாம் தீபூர்வாகஸ்யநுத்யம:
மத்யாநாமநுதாபாதி: சிக்ஷா கடிந சேதஸாம்

**விளக்கம்** – “ப்ரபந்நன் ஒருவன் தான் செய்த அபசாரத்திற்காக வருந்தவில்லையென்றால், அவனுக்கு ஞானம் பிறக்கவில்லை என்றே கொள்ளவேண்டும்”, என்று நஞ்ஜீயர் உரைத்தார்; ஆனால் இவ்விதம் அவன் வருந்தாமைக்குக் காரணம் அவனுடைய மந்தமான புத்தியே ஆகும். “பகவானுடைய விருப்பம் இன்மையைப் பெற்றுத் தரும்” என்பதான புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களானவை பூர்வகர்மங்களால் உண்டாகின்றன; இவை ஒரு சில ப்ரபந்நர்களுக்கு உண்டாகாது. ஒரு சிலர் ப்ரபந்நர்களுக்கு இவ்விதம் உண்டாகும்

பாபங்கள், அவர்கள் அதற்காக வருந்தியவுடனேயே கழிந்துவிடும். கடினமான மனம் கொண்டவர்கள் இவ்விதம் வருந்தமாட்டனர். ஆகவே புத்தி அறிந்து செய்கின்ற பாபங்கள் செய்த ப்ரபந்நன் அதற்காக வருந்தி, ப்ராயச்சித்த ப்ரபத்தியைச் செய்யாதபோது, அவற்றுக்கான துன்பங்களை அனுபவிக்கவேண்டும் என்று ச்ருதிகள் கூறுவது போன்று, இங்குள்ளபோதே சிறிய தண்டனைகள் கிட்டுவதன் மூலம், அந்தப் பாபங்கள் நீங்குகின்றன. விவேகாநாம் ப்ரபந்நானாம் தீபூர்வாகஸ்யநுத்யம: மத்யாநாமநுதாபாதி: சிக்ஷா கடிந சேதஸாம் – விவேகம் அடைந்த ப்ரபந்நர்களுக்கு புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களைச் செய்தல் என்பதே உண்டாகாது, நடுத்தரமான ப்ரபந்நர்களுக்கு வருந்துதல் மற்றும் ப்ராயச்சித்தம் ஆகியவை உண்டாகும், கடினமான மனம் கொண்டவர்களுக்குச் சிறிய தண்டனைகள் உண்டாகும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 102)

224. [1] என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே "ஸர்வலோக பூதேப்ய:" என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட்டாக்குகிற சரண்யன் [2] அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்களளவா லன்றிக்கே அங்குற்றேன் என்னான்புணரா யென்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்ய கதித்வமுடைய தமக்குப் [3] பாதமே சரணாக்க அவையே சேமங்கொண்டு ஏகசிந்தையராய் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து விளம்ப ரோஷம் உபாயத்தாலேயழிய, [4] உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத் கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின [5] சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீய சேஷமாக்கியும், புறத்திட்டுக் காட்டியென்று, ப்ரஸங்கிக்கில் முடியும்படிவிட்டு, [6] தந்தை தாய் உண்ணுஞ்சோறு மாநிதி பூவையாவையு மொன்றேயாக்கி, [7] தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ வென்னுமார்த்தியோடே [8] திரிவிக்கிரமனாகக் குறள் கோலப்பிரானாய் அடியை மூன்றையிரந்த வன் கள்வன் கண்முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை [9] இணைத் தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத்திலதத்தே கண்டு அகலகில்லேனென்று பூர்வவாக்யமநுஸந்தித்தவர், [10] பிணக்கறத் தொடங்கி வேதப்புனிதவிறுதி சொன்ன ஸாத்யோபாய ச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்கு, [11] தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேனென்று

ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங்களாலே காட்டுகிறார் ஆறாம் பத்தில்.

**அவதாரிகை -** ஆறாம்பத்தால், தன்னுடைய பரம க்ருபையாலே ஸர்வரும் வந்து ஆச்ரயிக்கும்படியிருக்கிற ஸர்வ சரண்யனான ஸர்வேச்வரன் பக்தி பாரவச்யத்தாலே அநந்யகதிகளான தமக்குத் தன் திருவடிகளையே நிரபேக்ஷோபாயமாகக் காட்டிக் கொடுக்க, அவ்வுபாயத்திலே விச்சேதமில்லாதபடி நடக்கிற வ்யவஸாயத்தையுடையராய் தம்முடைய வ்யவஸாயத்தை கடக முகத்தாலே யிவனுக்கறிவித்து வரவு தாழ்க்கையாலே தமக்கு விளைந்த ப்ரணயரோஷத்தை யவன் பரிஹரிக்க அவன் ஸாமர்த்யத்தை யநுஸந்தித்து குணாநுபவத்துக்குப் பண்ணின ப்ரபத்தியும் பலித்தவாறே ப்ராப்திக்கு ப்ரபத்தி பண்ணுவதாகக் கோலி, ஸித்தோபாயவரணம் இதர பரித்யாக பூர்வகமாகையாலே பௌராணிக வசந ப்ரக்ரியையாலே உபாய விரோதிகளான த்யாஜ்யாம்சங்களை ஸவாஸநமாக தத் ப்ரஸங்கமும் அஸஹ்யமாம்படி விட்டு, விட்டவையெல்லாம் தமக்குப் பற்றுகிற விஷயமேயாக நினைத்து பரமார்த்தியோடே தமக்குபாயமாக நினைத்திருக்கும் திருவுலகளந்தருளின் ஸர்வஸுலபமான திருவடிகளை நித்யஸூரிகளும் வந்து அனுபவிக்கும்படி நிற்கிற திருமலையிலே கண்டு கொண்டு, பூர்வ வாக்ய ப்ரக்ரியையாலே சரணம் புக்கவர் "பத்துடையடியவ"ரிலே தொடங்கி, அஞ்சாம் பத்தளவாக உபதேசித்த பக்த்யுபாயத்தின் துஷ்கரத்வாதி தோஷாநுஸந்தாநத்தாலே சோகம் ஜநிக்கும்படியான பாகம் பிறந்தவர்களுக்கு, தம்முடைய ப்ரபத்தி நிஷ்டையை ப்ரகாசிப்பிக்கிறாரென்கிறார்.

**விளக்கம் –** ஆறாம் பத்தால் கூறுவது என்ன? ஸர்வேச்வரன் தன்னுடைய உயர்ந்த கருணை காரணமாக அனைவரும் வந்து தன்னைச் சரணம் என்று புகுந்து நிற்கலாம்படி உள்ளான். பக்தியின் பரவசம் காரணமாக வேறு எந்த ஒரு புகலிடமும் இல்லாத நம்மாழ்வாருக்கு, தனது திருவடிகளை, வேறு எதனையும் எதிர்பாராத உபாயமாகக் காட்டிக் கொடுத்தான். அப்படிப்பட்ட உபாயத்திலிருந்து தனக்கு எந்தவிதமான மாறுபாடும் ஏற்படாமல் நம்மாழ்வார் இருந்தார். தனது அத்தகைய நிலையை தூது மூலம் அவனுக்கு அறிவித்தார். ஆனால் அவன் வராமல் காலம் தாழ்ந்தினான். இதன் காரணமாக ப்ரணய தோஷம் கொண்டராக

நின்ற ஆழ்வாருடைய ப்ரணய தோஷத்தை, அவன் விலக்கினான். இவ்விதம் விலக்கிய அவனுடைய சாமர்த்தியத்தை எண்ணியபடி, ஐந்தாம் பத்தில் அவனுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும்அனுபவித்தபடி இருத்தல் வேண்டும் என்று செய்த ப்ரபத்தியானது பலித்தது. அதனைத் தொடர்ந்து அவனை அடைதல் என்ற பேற்றுக்கு ப்ரபத்தி செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். இவ்விதம் பேற்றுக்கான ப்ரபத்தியைச் செய்யவேண்டும் என்றால், அதற்கு முன்பாக மற்ற விஷயங்கள் குறித்த ஈடுபாடுகள் அனைத்தையும் துறக்கவேண்டும் என்பதால், புராணங்களை நன்றாக அறிந்தவர்களுடைய சொற்களின்படி, ப்ரபத்திக்கு விரோதிகளாக உள்ளவையும் துறப்பதற்கு ஏற்றவையும் ஆகிய அனைத்தையும் அவற்றின் வாசனைகளுடன் துறந்தார். துறந்தவை அனைத்தும் தமக்குப் பற்றுகின்ற விஷயமேயாக எண்ணி மிகுந்த துக்கத்துடன், தனக்கு ஏற்ற உபாயமாக எண்ணியுள்ளதும், அனைத்து லோகங்களையும் அளந்ததும், எளிதில் அடையலாம்படி உள்ளதும் ஆகிய அவன் திருவடிகளை, நித்யஸூரிகளும் வந்து நின்று அனுபவிக்கலாம்படியாக உள்ள திருவேங்கடத் திருமலையில் கண்டார். உடனே, த்வய மந்திரத்தின் முதல் வாக்கியம் கொண்டு சரணம் புகுந்தார். இவ்விதம் சரணம் புகுந்தவர், திருவாய்மொழி (3-1) – பத்துடை அடியவர் - என்பதில் தொடங்கி, ஐந்தாம் பத்து முடிய உள்ள அனைத்திலும் உபதேசித்த பக்தி உபாயத்தின் “செய்வதற்கு மிகவும் கடினமானது” என்ற நிலை ஏற்பட்டவர்களுக்கு, தனது ப்ரபத்தி நிஷ்டையை ஆறாம் பத்து மூலம் வெளிப்படுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - (என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே “ஸர்வலோக பூதேப்ய:” என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட்டாக்குகிற சரண்யன்) “ஏறு சேவகனார்க் கென்னையுமுள்ளென்மின்களே” என்று ஆர்த்த ரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்கிறவனுக்கு ரஷ்ய வர்க்கத்திலே நானுமொருத்தியுள்ளென்று சொல்லுங்கோளென்றும், “திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரணே” என்று திருவிண்ணகரிலே நின்றருளினவன் திருவடிகளல்லது ஸர்வர்க்கும் வலிய புகலில்லையென்றும், “வன்சரண் சுரர்க்காய்” என்று தேவர்களுக்கு வலிய ரக்ஷகனாயென்றும், “அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மி னென்றென்றருள் கொடுக்கும்” என்று நமக்கு

சேஷபூதராயுள்ளாரெல்லாரும் நம்மடிகளின் கீழே அநந்யப்ரயோஜநராய்ப் புகுந்து உஜ்ஜீவியுங்கோளென்றென்று தன்னருளைப் பண்ணாநிற்குமென்றுஞ் சொல்லுகிறபடியே, தன்னுடைய க்ருபையாலே "ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்" என்று வந்து சரணாகதனான ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸர்வலோக சரண்யனென்ற உக்தி ஸமுத்ர கோஷம் போலே நிரர்த்தமாகாதபடியாகவும், "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அபயம் ஸர்வபூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம" என்று சரணாகத ரக்ஷணத்திலே தீக்ஷிதனாய் சரண்யனான தான் சொன்ன உக்தி கண்டாது பரியாகாதபடியாகவும் "வானவர் கோனொடும் நமன்றெழுந் திருவேங்கடம்" என்றும், "எழுவார் விடைகொள்வாரீன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம்" என்றும், "போதறிந்து வானரங்கள்", "கண்டு வணங்கும் களிறு" என்றும் நித்யஸூரிகள், நித்யஸம்ஸாரிகள், ப்ரயோஜநாந்தரபரர், அநந்யப்ரயோஜநர், மநுஷ்யர், திர்யக்குகள் என்கிற வாசியற ஆச்ரயிக்கலாம்படி ஸர்வ ஸமாச்ரயணீயனாய் நிற்கையாலே தன்னுடைய உபாயத்வம் சிலாலிகிதமாம்படி திருமலையிலே யெழுந்தருளி நிற்கிற அநாலோசித விசேஷ அசேஷலோக சரண்யனான ஸர்வேச்வரன்.

**விளக்கம்** – (என்னையும்) - திருவாய்மொழி (6-1-10) - ஏறு சேவகனார்க் கென்னையுமுள்ளென்மின்களே - என்பதில் துன்பத்தில் உள்ளவர்களைக் காப்பாற்றுதல் என்ற உறுதியில் உள்ளவனிடம் "காப்பாற்றப்பட வேண்டிய பொருள்களில் நானும் உள்ளேன் என்று உரைப்பீர்களாக" என்றும், (யாவர்க்கும்) - திருவாய்மொழி (6-3-7) - திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரணே - என்பதில் திருவிண்ணகர் க்ஷேத்ரத்தில் நின்ற அவன் திருவடிகள் அல்லாமல் அனைவருக்கும் ஏற்றதொரு உறுதியான புகலிடம் வேறு இல்லை என்றும், (சுரர்க்கு ஆய்) - திருவாய்மொழி (6-3-8) – வன்சரண் சுரர்க்காய் – என்பதில் தேவர்களுக்கு உறுதியான ரக்ஷகன் என்றும், திருவாய்மொழி (6-10-11) – அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மி னென்றென்றருள் கொடுக்கும் - என்பதில் "நமக்கு அடியார்களாக உள்ள அனைவரும் நம்முடைய திருவடிகளின் கீழே வேறு எந்தப் பயனையும்

எதிர்பாராமல் புகுந்து நின்று வாழீர்களாக” என்று தனது க்ருபையைச் செய்தபடி உள்ளான் என்றும் கூறுவதற்கு ஏற்ப. (கருணையாலே) - தன்னுடைய க்ருபையாலே. (ஸர்வலோக என்றது கடல் ஓசை ஆகாமல்) - இராமாயணம் யுத்தகாண்டம் (17-14) - ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் – அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவனும் மஹாத்மாவும் ஆகிய இராமன் முன்பாக வந்து நிற்கும் விபீஷணனாகிய என்னைக் குறித்து விரைந்து சென்று உரைப்பீர்களாக - என்பதற்கு ஏற்ப, சரணம் புகுந்தவனாகிய விபீஷணன் இராமனைக் குறித்து உரைத்த சொற்களாகிய “ஸர்வ லோக சரண்யன் - அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவன்” என்பவை கடலின் ஓசை போன்று பயனற்றுப் போகாமல், (பூதேப்ய: என்றது கழுத்துக்கு மேலே ஆகாமல்) – இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அபயம் ஸர்வபூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம - ஒருமுறை ப்ரபத்தி செய்தவனுக்கும், “நான் உனக்காகவே உள்ளேன்” என்று யாசித்து நிற்பவனுக்கும் அனைத்து உயிர்களிடமிருந்தும் பயம் இன்மையை நான் ஏற்படுத்துகிறேன்; இது எனது விரதம் ஆகும் - என்று கூறுவதற்கு ஏற்ப தன்னைச் சரணம் புகுந்தவர்களைக் காப்பாற்றுதல் என்பதில் விரதம் பூண்டவனாக, இவ்விதம் அனைவருக்கும் புகலிடமாக உள்ள தனது சொற்கள் தனது கழுத்துக்கு மேல் சென்று கடனாக மாறாதபடி, (உபாயத்தை கல்வெட்டு ஆக்குகிற சரண்யன்) திருவாய்மொழி (3-3-7) - வானவர் கோனொடும் நமன்றெழுந் திருவேங்கடம் – என்றும், முதல் திருவந்தாதி (26) - “எழுவார் விடைகொள்வாரீன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம் - என்றும், இரண்டாம் திருவந்தாதி (72) - போதறிந்து வானரங்கள் - என்றும், மூன்றாம் திருவந்தாதி (70) – கண்டு வணங்கும் களிறு – என்றும் கூறுவதற்கு ஏற்ப நித்யஸூரிகள், நித்ய ஸம்ஸாரிகள், மற்ற பயன்கள் எதனையும் விரும்பாமல் உள்ளவர்கள், வேறு பயனை விரும்புபவர்கள், மனிதர்கள், விலங்குகள் என்பது போன்ற வேறுபாடு ஏதும் ஆராயாமல், அனைவரும் வந்து அண்டும்படியாக, அனைவர்க்கும் புகலிடமாக நிற்பதால், தன்னுடைய “உபாயமாக உள்ள தன்மை” என்பது கல்லில் செதுக்கி வைக்கலாம்படியாகத் திருமலையில் எழுந்தருளி நிற்பவனாகிய,

சிந்திக்கவும் இயலாதபடியான சிறப்புகள் பலவற்றையும் கொண்டவனும், அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** - [2] (அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்களளவாலன்றிக்கே அங்குற்றேனென்னான் புணராயென்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்யகதித்வமுடைய தமக்கு) "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதிமந்யாமவிதுஷாம் கதிர்கம் யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் சௌநகமுநி:" என்கிறபடியே உபாயாந்தரங்களை யறியவு மநுஷ்டிக்கவும் மீடான ஜ்ஞாந சக்திகளில்லாமையாலேயாதல் பகவதேக பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ததேகோபாயத்வ மொழிய தத் வ்யதிரிக்தோபாயாந்வயமாகாதென்று, "உன்னாலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன்" என்னும்படியான ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தாலே யாதல், அநந்யகதிகளாமள வன்றிக்கே, "அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லே னுன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனுமல்லேன்", "என்னான் செய்கேன்", "பூவார்கழல்களரு வினையேன் பொருந்துமாறு புணராய்" என்று ஸாதநமநுஷ்டித்து முக்தப்ராயனாயிருக்கிறே னல்லேன், ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவர்களிலே ஒருவனா யிருக்கிறே னல்லேன்; மேலும் ஸாதநாநுஷ்டாநம் பண்ணவொண்ணாதபடி உன் ஸௌந்தர்யாதிகளிலே ஈடுபட்டு உன்னைக் காண வேணுமென்னுமாசையாலே பலஹீநனாய்த் தளர்ந்து இனியுபாயாநுஷ்டாந க்ஷமனல்லேன்; உன் திருவடிகளைப் பெறுகைக்கு என்னால் செய்யலாவதில்லை, எனக்கும் செயலுக்குமென்ன சேர்த்தியுண்டு, முன்பு பரிக்லுப்தமான உபாயங்களொன்றுமென் பக்கலில்லை; நிரதிசய போக்யமான உன் திருவடிகளை நான் கிட்டும் வழி கல்பிக்க வேணுமென்று சொல்லும்படி. "மெய்யமர் காதல்" என்று அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் குண ஜ்ஞாநத்தாலேயாதல் தரிக்கவொண்ணாதபடியாய் திருமேனியிலே அணைய வேண்டும்படியான காதலென் பக்த்யதிசயம். அதினுடைய பலமாகவும், உபாயாந்தரத்துக்காளன்றிக்கே "களைகண் மற்றிலேன்" என்னும்படி அநந்யகதித்வமுடையரான தமக்கு. ஸமாஸத்தில் பக்தி பூம பலமென்ன வேணும், பூமாபலமென்கிறவிது பாடஸ்கலநத்தாலே வந்ததாமித்தனை.

**விளக்கம் -** (அஜ்ஞாந அசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்கள் அளவால் அன்றிக்கே) - அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதிமந்யாமவிதுஷாம் கதிர்கம் யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் சௌநகமுநி: - அஜ்ஞானத்தாலோ, அளவிட இயலாதவன் என்ற ஞானத்தாலோ, பக்தியின் மேன்மையாலோ, இந்த உலகில் ஸர்வேச்வரனைத் தவிர வேறு எந்த ஒரு உபாயமும் இல்லை என்று அறிபவர்களுக்கு [அல்லது வேறு உபாயம் உள்ளது என்று அறியாதவர்களுக்கு] அவனே உபாயமாகவும் உபேயமாகவும் ஆகிறான் என்று சௌநக மஹரிஷி ஜிதந்தை என்ற மந்த்ரத்தின் பொருளை விரிவாக உரைத்தார் - என்பதற்கு ஏற்ப மற்ற உபாயங்களை அறியத்தக்கதான ஞானம் இல்லை என்பதால், அவற்றை இயற்றுவதற்கான ஆற்றல் இல்லை என்பதால், பகவானுக்கு மட்டுமே வசப்பட்டிருக்கும் ஆத்மாவிற்கு அவன் மட்டுமே உபாயமாக இருத்தல் அல்லாமல் அவனைக் காட்டிலும் வேறாக உள்ள எந்த ஒரு வஸ்துவும் உபாயம் என்று எண்ணுதல் கூடாது என்பதைத் திருவாய்மொழி (5-8-3) – உன்னாலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன் - என்று உரைக்கும்படியாக ஸ்வரூபத்தைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிதல் மற்றும் வேறு கதி இல்லாதவர் என்பது மட்டும் அல்லாமல். (அங்குற்றேன் என்னான்புணரா யென்னும்படி) – திருவாய்மொழி (5-7-2) - அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன் உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான் எங்குற்றேனும் அல்லேன் - என்பதற்கு ஏற்ப ஒரு உபாயத்தைக் கைக்கொண்டு முக்தனாகவில்லை, உபாயங்களைக் கைக்கொள்பவர்களில் ஒருவனாக இல்லை, எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ள இயலாமல் உனது திருமேனியின் அழகு போன்றவற்றில் ஈடுபட்டு நின்று உன்னைக் காணவேண்டும் என்ற மிகுந்த ஆசை காரணமாக பலம் இழந்து தளர்ந்து வேறு எந்த உபாயத்தையும் கைக்கொள்ளும் ஆற்றல் கொண்டவனும் இல்லை என்றும், திருவாய்மொழி (5-8-3) – என் நான் செய்கேன் – என்பதற்கு ஏற்ப உன்னுடைய திருவடிகளைப் பெறுவதற்கு என்னால் செய்ய முடிந்தது ஏதும் இல்லை, எனக்கும் அது போன்ற செயல்களுக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது, முன்பு பலரால் உண்டாக்கப்பட உபாயங்கள் ஏதும் என்னிடம் இல்லை என்றும், திருவாய்மொழி (6-10-4) – பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு

புணராய் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற இனிமை நிறைந்தவனாகிய உனது திருவடிகளை நான் அடையும் வழியை நீயே எனக்குக் கற்பிக்கவேண்டும் என்றும் கூறுவதற்கு ஏற்ப, (மெய்யமர் பக்தி பூம பலமாகவும்) – திருவாய்மொழி (6-8-2) – மெய்யமர் காதல் - என்பதற்கு ஏற்ப அவனுடைய ஸ்வரூபத்தை எண்ணியோ, குணங்களை எண்ணியோ மட்டுமே தரிக்க இயலாமல், அவனுடைய திருமேனியில் அணையவேண்டும் என்னும்படியான ப்ரேமையானது கடந்த பத்தில் தமக்குப் பிறந்த மிகுந்த பக்தியின் பயனாகவும், வேறு எந்த உபாயங்களிலும் ஈடுபடாமல். (அநந்யகதித்வமுடைய தமக்கு) – திருவாய்மொழி (5-8-8) - களைகண் மற்றிலேன் - என்பதற்கு ஏற்ப வேறு கதி இல்லாமல் உள்ள தனக்கு.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 247)

3-10-5 இடரின்றியே ஒரு நாளொரு போழ்தில் எல்லாவுலகுங் கழியப்
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத் திண்தேர் கடவிச்
சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகள்
உடலொடுங் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ஒன்றுந் துயரிலனே

**பொருள் -** எந்தவிதமான இடரும் இல்லாமல் ஒரு நாளின் ஒரு முகூர்த்தகாலத்தில், க்ருஷ்ணனை அண்டி நிற்பதால் அனைத்து லோகங்களுக்கும் அப்பாலும் பரந்த புகழை அடைந்த அர்ஜுனனும், புத்திரர்களை இழந்த அந்தணனும் தன்னுடன் ஏறி வரும்படியாக உறுதியாகத் தேரைச் செலுத்தி எல்லையற்ற ஒளி வீசுவதாக உள்ள தனது பரமபதத்தில் தங்கியிருந்த அந்தணனுடைய புத்திரர்களைச் சரீரத்துடன் கொண்டு வந்து கொடுத்த ஸர்வேச்வரனை அண்டி நிற்கும் நான், சிறிதளவும் துயர் கொண்டவன் அல்லன்.

**அவதாரிகை –** வைதிக புத்ராநயநத்தை அநுஸந்தித்து, “இவனைப் பற்றின எனக்கு ஒரு துக்கமில்லை” என்கிறார்.

**விளக்கம் -** அந்தணனுடைய புத்திரர்கள் காரணமாக க்ருஷ்ணன் சென்ற நிகழ்வை எண்ணியபடி, “இப்படிப்பட்ட இவனைப் பற்றி நிற்கும் எனக்கு ஒரு துக்கமும் இல்லை”, என்கிறார்.

**வ்யாக்யானம்** - (இடரின்றியே) ஒரு வருத்தமுமின்றியே, (ஒரு நாள்) ஏகாஹதீக்ஷையான க்ரதுவிலே (ஒரு போழ்தில்) ப்ராதஸ்ஸவநம் தலைக்கட்டி மாத்யந்திந ஸவநத்துக்கு முன்னே, (எல்லாவுலகும் கழிய) ஆவரண ஸப்தங்களுக்கும் அவ்வருகுபட (பார்புகழ்ப் பார்த்தனும்) "யஸ்ய மந்த்ரீ ச கோப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜநார்த்தந" என்கிறபடியே க்ருஷ்ணனையே ஸர்வவித பந்துவுமாகப் பற்றின புகழையுடைய அர்ஜுநனும், (வைதிகனும்) க்ருஷ்ணன் திருவடிகளிலே நிரவதிகமான ஸ்நேஹத்தையுடைய ப்ராஹ்மணனும் (உடன் ஏற) தன்னோடே கூட ஏற.

**விளக்கம்** - (இடர் இன்றியே) - எந்தவிதமான பெருமுயற்சியும், அதனால் ஏற்படும் வருத்தமும் இன்றி, (ஒரு நாள்) - ஒரு நாளில் செய்யும் தீக்ஷை கொண்ட யாகத்தில். (ஒரு போழ்தில்) - காலையில் செய்ய வேண்டிய யாகத்திற்காண கர்மங்கள் தொடங்கி செய்து முடித்து, நண்பகல் செய்ய வேண்டிய கர்மங்களை இயற்றி முடிப்பதற்கு முன்பாக. (எல்லாவுலகும் கழிய) - ஏழு ஆவரணங்களையும் கடந்து. (பார்புகழ்ப் பார்த்தனும்) – மஹாபாரதம் - யஸ்ய மந்த்ரீ ச கோப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜநார்த்தந - நண்பனும், காப்பாற்றுபவனும், மந்த்ரியும் ஆகிய க்ருஷ்ணன் யாரிடம் உள்ளானோ - என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணனையே தனக்கு அனைத்துவிதமான உறவினர்களாகவும் அண்டி நிற்பதால் நிறைந்த புகழ் கொண்ட அர்ஜுனனும், (வைதிகனும்) – க்ருஷ்ணனுடைய திருவடிகளில் எல்லையற்ற ப்ரியம் கொண்ட அந்தணனும். (உடன் ஏற) - தன்னுடன் சேர்ந்து ஏறிக்கொள்ள.

**வ்யாக்யானம்** - (திண்தேர் கடவி) இவர்களைத் தேரிலே ஏற்றிக்கொண்டு, கார்யாகாரம் குலையாமே, மூலகாரணமான ப்ரக்ருதி பர்யந்தமாகத் தேருக்குத் திண்மையைக் கொடுத்து நடத்தி; பிண்டாவஸ்த்தையிலும் கடம் அநுவர்த்திக்குமாபோலே. ஒளி – அழகு. (சுடரொளியாய் நின்ற) நிரவதிக தேஜோரூபமாய், ஏகரூபமாய் நின்ற, (தன்னுடைய சோதியில்) தனக்கு அஸாதாரணமான தேசம், தன்னுடைய காந்தி வெள்ளமிட்டாற் போலேயிருக்கை, "அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந:" என்கிறபடியே

ஆயிரங்கோடி அக்ந்யாதித்யர்களுடைய தேஜஸ்ஸை ஓடவைத்து ஒரு தேசமாக வகுத்தாற்போலேயிருக்கையாலே இவர்களுக்குக் கண் கொண்டு பார்க்க வொண்ணாது. ஆகையாலே தமஸ்ஸளவிலே இவர்களை நிறுத்தி தன்னிலேமாகையாலே தானே போய்ப் புக்கான்; ஜலத்திலே மத்ஸ்யம் உலாவுமாபோலே தேசிகரே புகவேண்டும் நிலமிறே.

**விளக்கம்** - (திண்தேர் கடவி) – இவர்களைத் தனது தேரில் ஏற்றிக்கொண்டு, கார்யப் பொருளாக தேரின் உருவம் அழியாமல், மூலகாரணமாக உள்ள ப்ரக்ருதியின் முடிவிலும் தேருக்கு உறுதியை அளித்து நடத்தி; அதாவது மண்குவியலாக உள்ளபோதிலும் மண்குடம் என்னும் சிந்தனை தொடர்வது போன்று ஆகும். ஒளி என்றால் அழகு. (சுடர் ஒளியாய் நின்ற) - எல்லையற்ற தேஜஸ் கொண்டதாக, ஒரே தன்மை கொண்டதாக உள்ள. (தன்னுடைய சோதியில்) - தனக்கே உரித்தான சிறப்பைக் கொண்ட பரமபதம். அல்லது ஸர்வேச்வரனாகிய தன்னுடைய தேஜஸ்ஸானது வெள்ளம் போன்று எங்கும் சூழ்ந்து நிற்பதான பரமபதம். மஹாபாரதம் - அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: - சூரியன், சந்த்ரன், அக்னி போன்றவர்களைக் காட்டிலும் கோடி மடங்கு அதிகமான ஒளிவீசும் இடமாகிய விஷ்ணுவின் பரமபதம் - என்பதற்கு ஏற்ப ஆயிரம் கோடி அக்னி மற்றும் ஆதித்யர்களுடைய தேஜஸ்ஸை ஒரே இடமாக நிறுத்தி வைத்தது போன்று உள்ளதால், அர்ஜுனனாலும் அந்தணனாலும் கண்கள் கொண்டு காண இயலாதபடி உள்ளது. ஆகவே ப்ரக்ருதியின் எல்லையில் இவர்களை நிறுத்திவிட்டு, தனது இடமாக உள்ளதால், தானே சென்றான். நீரில் மீன்கள் மட்டுமே செல்லமுடியும் என்பது போன்று, ஞானம் உள்ளவர்கள் மட்டுமே செல்லக்கூடிய இடமாகும்.

**வ்யாக்யானம்** - (வைதிகன் பிள்ளைகளை) ப்ராஹ்மண புத்ரர்களை. (உடலொடும் இத்யாதி) கொண்டு போகிறபோதைப் படியில் ஒன்றுங் குறையாதபடி கொண்டு வந்து கொடுத்தானாயிற்று, காலக்ருத பரிணாமமில்லாத தேசமாகையாலே. (உடலொடும் இத்யாதி) பூசின மஞ்சளும், உடுத்தின பட்டும், இட்ட சவடிப்பூணூலும், இட்ட காதுபணிகளுமான ஒப்பனையில் ஒன்றுக்குறையாதபடி கொண்டு வந்து கொடுத்தவனை என்றுமாம். “பிறக்கப் பிறக்கக் கொண்டு

போனார்களாகில், இப்போது இவையெல்லாம் உண்டோ?", என்று பட்டரைக் கேட்க; "ருஷி புத்ரர்களாகையாலே பிறக்கிறபோதே அவற்றோடே பிறப்பர் காணும்" என்று அருளிச்செய்தார். (பற்றி இத்யாதி) ஸமுத்ரத்தில் நீரை ஸஹ்யத்திலே ஏற்றுமதுவே வருத்தமுள்ளது, ஸஹ்யத்தில் நீரை ஸமுத்ரத்திலே கொண்டுவருமன்று ஒரு வருத்தமில்லையே; அப்படியே அங்குப் புக்காரை இங்கே மீட்கையாகிறது அவன் திருவுள்ளத்தோடு சேராது; இங்குள்ளாரை அங்கே கொண்டு போகையாயிற்று அவன் திருவுள்ளத்திற் பொருந்துவது.

**விளக்கம்** - (வைதிகன் பிள்ளைகளை) - அந்தணனுடைய புத்திரர்களை. (உடலொடும் இத்யாதி) - கொண்டு வந்து தந்தபோது, எதுவும் குறையாதவிதத்தில் கொண்டு வந்து கொடுத்தான்; அதாவது காலத்தின் காரணமாக மாறுபாடு ஏதும் உண்டாகாத இடம் என்பதால் ஆகும். (உடலொடும் இத்யாதி) – அந்தப் புத்திரர்கள் பூசிக்கொண்ட மஞ்சளும், உடுத்தியிருந்த பட்டாடையும், பொன்னால் செய்யப்பட்ட பூணூலும், காது கடுக்கன்களும் என்றுள்ள பலவும் கலையாதபடி கொண்டு வந்தான் என்றும் கூறலாம். இதனைக் கேட்ட ஒருவர் ஸ்வாமி பராசரபட்டரிடம், "இந்தக் குழந்தைகள் பிறந்தவுடனேயே அவற்றைக் கொண்டு சென்றனர் என்றுள்ளபோது, இது போன்ற ஆபரணங்கள் எவ்விதம் உள்ளன?", என்றார்; இதற்குப் பட்டர், "ரிஷியின் புத்திரர்கள் என்பதால் பிறக்கும்போது அவற்றுடனேயே பிறப்பார்கள்" என்றார். (பற்றி) - ஸமுத்ரத்தில் உள்ள நீரை ஒரு மலை மீது கொண்டு செல்வதில் சிரமம இருக்கலாம்; ஆனால் மலையில் உள்ள நீரை ஸமுத்ரத்திற்குக் கொண்டு வருவதில் எந்த சிரமமும் இருக்காது அல்லவோ? அதே போன்று, அங்கு உள்ளவர்களை இங்கு கொண்டு வருதல் என்பது, அவன் திருவுள்ளத்திற்குப் பொருந்தாத ஒன்றாகும்; ஆனால் இங்கு உள்ளவர்களை அங்கு கொண்டு சேர்த்தல் என்பது பொருத்தமானதே ஆகும்.

**வ்யாக்யானம்** - புத்ரார்த்தியானவளவன்றியே ஸ்வரூபாநுரூபமாக அவன் திருவுள்ளத்துக்குப் பொருந்தின செயலை ஆசைப்பட்ட எனக்கு ஒரு துக்கமுண்டோ என்கிறார். கர்மஸம்பந்தமற்றுப் பொகாமையாலேயாயிற்று இவர்களுக்கு மீளவேண்டிற்று. கர்மஸம்பந்தமற்றார் போகக்கடவ தேசத்திலே இவர்கள் போனபடி என் பின்னை? என்னில், நாய்ச்சிமார் தங்கள் ஸ்வாதந்த்ர்யம்

காட்டுகைக்காக இவர்களை அங்கே அழைப்பித்தார்களாயிற்று. அஙஙனன்றிக்கே, “இந்நின்ற நீர்மை இனியா முறாமை” என்று தொடங்கி, “மங்கவொட்டு” என்று மடி பிடித்துக் கூப்பிடும்படி ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்தும், “காதல்கடலின் மிகப்பெரிதால்” என்றும், “மண் திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால்” என்றும், “அதனிற் பெரிய என்னவா” என்றும் இப்படி பகவத் விஷயத்திலே கண்ணழிவற்ற பக்தி விளைந்து போக ஆசைப்படுகிற எனக்கு ஒரு துக்கமில்லை யென்கிறார்.

**விளக்கம்** - ஆனால் இவ்விதம் அவனுடைய திருவுள்ளத்திற்கும் பொருந்தாத செயலை ஏன் செய்தான் என்றால், அந்தணனின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஆகும். ஆனால் இது போன்று புத்திர சோகம் என்பதன் காரணமாக அவனுடைய திருவுள்ளத்திற்கு ஏற்காத ஒன்றைச் செய்யாமல், எனது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்கும்விதமாக அவனுடைய திருவுள்ளத்திற்குப் பொருந்துகின்ற செயலை விரும்பும் எனக்கு ஏதும் துக்கம் ஏற்படுமோ என்கிறார். கர்மஸம்பந்தம் விலகாமல் இருந்ததால் அந்தப் புத்திரர்களுக்கு இங்கு மீண்டும் வருதல் என்பது ஏற்பட்டது; ஆனால் கர்மஸம்பந்தம் இல்லாதவர்கள் மட்டுமே, செல்லக் கூடிய இடத்திற்கு இவர்கள் எவ்விதம் சென்றனர்? அங்கிருந்த பிராட்டிமார்கள் க்ருஷ்ணனைக் காணவேண்டும் என்ற விருப்பம் கொண்டு, தங்களுடைய சுதந்திரத்தை வெளிப்படுத்தியதால் இவ்விதம் சென்றனர். அல்லது திருவிருத்தம் (1) - இந்நின்ற நீர்மை இனியாமுறாமை - என்று தொடங்கி, திருவாய்மொழி (10-7-10) - மங்கவொட்டு - என்று மடியைப் பிடித்து அழைக்கும்படியாக ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்தாலும், திருவாய்மொழி (7-3-6) – காதல்கடலின் மிகப்பெரிதால் - என்றும், திருவாய்மொழி (7-3-8) - மண் திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால் - என்றும், திருவாய்மொழி (10-10-10) - அதனிற் பெரிய என்னவா – என்றும் கூறுவதற்கு ஏற்ப பகவத்விஷயத்தில் எத்தகைய அழிதலும் இல்லாத பக்தி விளைந்து பேற்றை எண்ணும் எனக்கு எந்தத் துக்கமும் இல்லை என்கிறார்.

3-10-6 துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்ற வண்ணம் நிற்கவே
துயரின் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண் காண வந்து
துயரங்கள் செய்து தன் தெய்வ நிலையுலகில் புகவுய்க்குமம்மான்
துயரமில்சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்ற யான் ஓர் துன்பமிலனே

**பொருள் -** இந்த உலகத்துடன் ஸம்பந்தம் இல்லாததால் எந்தவிதமான துக்கமும் இல்லாதபடி அவற்றுக்கு எதிர்த்தட்டாக உள்ளதும், எல்லையற்ற தேஜஸ் வடிவமாக உள்ளதும் ஆகிய தனக்கே உரியதான திவ்யமங்கள திருமேனியானது பரமபதத்தில் உள்ளபோதிலும், துக்கத்திலேயே உழன்றபடி உள்ளதான மனிதப்பிறவியில் தோன்றி, இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டதான தனது திருமேனியை மனிதர்களுடைய கண்கள் மூலம் காணலாம்படியாக இங்கு இவர்களுக்கு அருகில் வந்து, தனது ரூபம் மற்றும் குணங்கள் போன்றவற்றாலும், தன்னை அண்டியவர்கள் மற்றும் அண்டாதவர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவரையும் ஈடுபடுத்தி, தேர் ஓட்டுதல் மற்றும் தூது செல்லுதல் போன்ற தாழ்ந்த செயல்களைச் செய்தாலும் தனது திவ்யமான நிலை இந்த உலகில் வெளிப்படும்படியாகச் செய்து, தனது மேன்மையை அறியாத இந்த உலகத்தில் நிலைநிறுத்தும்படியாகச் சென்று, அனைத்தையும் ஆள்பவனாக, தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ளவனாக, வியக்கவைக்கும் குணங்கள் கொண்டவனாக உள்ள க்ருஷ்ணனுடைய புகழ் அனைத்தையும் அனுபவிக்கப் பெற்ற நான், எந்தவிதமான துன்பமும் இல்லாதவன் ஆவேன்.

**அவதாரிகை -** தன்னுடைய அப்ராக்ருத விக்ரஹத்தை இதர ஸாஜாதீயமாக்கி ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்கின க்ருஷ்ணகுணங்களை அநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு துக்க கந்தமல்லை யென்கிறார்.

**விளக்கம் –** “தனது தெய்வீகமான திருமேனியைத் தன்னைக் காட்டிலும் வேறுபட்ட ஸம்ஸாரிகளுடைய கண்களால் காண்பதற்காக ஏற்ப வந்து நின்ற க்ருஷ்ணனுடைய குணங்களை அனுபவிக்கப் பெற்ற எனக்கு, துக்கத்தின் வாசனை கூட இல்லை”, என்கிறார்.

**வ்யாக்யானம்** - (துயரில் இத்யாதி) ஹேயப்ரத்யநீகமாய், சுத்தஸத்த்வமயமாகையாலே நிரவதிக தேஜோரூபமாய், பிறர்க்கு உள்ளதொன்றன்றிக்கே தனக்கு அஸாதாரணமான விக்ரஹமானது, (நின்ற வண்ணம் நிற்கவே) அங்கிருக்கும்படியில் ஒன்றுங்குறையாமே விளக்கிற் கொளுத்திய விளக்குப்போலே அங்கு நின்ற வண்ணம் இங்கு நிற்க. "ஸ்வாம் ப்ரக்ருதிமதிஷ்டாய" இறே. (துயரில் இத்யாதி) துக்க ஸாகரத்திலே அழுந்தாநின்றுள்ள மநுஷ்யருடைய ஜந்மங்களிலே ஆவிர்பவித்து. "தேவகி பூர்வஸந்த்யாயாமாவிர்பூதம்" என்கிறபடியே வந்து தோற்றி.

**விளக்கம்** – (துயரில் இத்யாதி) - தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாகவும், சுத்த ஸத்வமாக உள்ளதால் தேஜஸ் நிறைந்ததாகவும், தனக்கு மேல் ஏதும் இல்லாதது மட்டும் அல்லாமல் மற்றவர்களுக்கு இருப்பது என்பது அல்லாமல் தனக்கு மட்டுமே உள்ளதும் ஆகிய சிறப்பான திருமேனியானது. (நின்ற வண்ணம் நிற்கவே) - பரமபதத்தில் இருந்தபடியே. அதாவது அங்கு இருக்கின்ற நிலையில் எந்தவிதத்திலும் குறையாமல், விளக்கு கொண்டு ஏற்றப்பட்ட மற்றொரு விளக்கு போன்று, அங்கிருப்பது போன்றே இங்கும் இருந்து. கீதை (4-6) – ஸ்வாம் ப்ரக்ருதிம் அதிஷ்டாய: - என்னுடைய ப்ரக்ருதியை என் வசப்படுத்தி - என்பது காண்க. (துயரில் இத்யாதி) - துக்கம் என்ற பெருங்கடலில் ஆழமாக நின்றபடி உள்ள மனிதப்பிறவியில் வெளிப்பட்டு. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-2) - தேவகி பூர்வஸந்த்யாயாமாவிர்பூதம் - தேவகி என்னும் கிழக்குத்திசையில் வெளிப்பட்டான் - என்பதற்கு ஏற்ப தோன்றி.

**வ்யாக்யானம்** - (கண் காண வந்து) மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்கு விஷயமன்றியே நித்யஸூரிகளுக்கு ஸதா தர்சந விஷயமான தன்னை மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்கு விஷயமாக்கி, (துயரங்கள் செய்து) அநுகூலரை அழகாலே நோவுபடுத்தியும் ப்ரதிகூலரை ஆயுதத்தால் நோவுபடுத்தியும். "க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா ப்ருதுலோசந: மோஹயித்வா ஜகத் ஸர்வம் கதஸ் ஸ்வம் ஸ்தாநமுத்தமம்" ப்ரதிகூலரை முட்கோலாலே சாடியும், அநுகூலரைக் கண்ணழகாலே சாடியும் போனபடி. "இணைக் கூற்றங்கொலோ" என்னும்படியிறே கண்ணற்று நலியும்படி.

**விளக்கம்** - (கண் காண வந்து) - மனிதர்களுடைய சாதாரண கண்களால் காண இயலாதபடி உள்ளதும், நித்யஸூரிகளால் எப்போதும் காணலாம்படி உள்ளதும் ஆகிய தன்னை, சாதாரண கண்களால் காணலாம்படிச் செய்து. (துயரங்கள் செய்து) - தனது அடியார்களைத் தனது வடிவழகு மூலம் துயரம் அடையும்படிச் செய்து. மஹாபாரதம் மௌஸலபர்வம் - க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா ப்ருதுலோசந: மோஹயித்வா ஜகத் ஸர்வம் கதஸ் ஸ்வம் ஸ்தாநமுத்தமம் - நீண்ட அழகான திருக்கண்கள் கொண்ட க்ருஷ்ணன் இந்தப் பூமியின் பாரத்தைக் குறைத்து, அனைத்து லோகங்களையும் மயக்கும்படிச் செய்து, தனது உயர்ந்த இடத்தை அடைந்தான் - என்பதற்கு ஏற்ப விரோதிகளை முள் நிறைந்த கோல் கொண்டு விரட்டியும், அடியார்களைத் தனது அழகான திருக்கண்கள் கொண்டு வீழ்த்தியும் செய்தான். திருவாய்மொழி (7-7-1) - இணைக் கூற்றங்கொலோ - என்பதற்கு ஏற்ப திருக்கண்களின் அழகு கொண்டு தயை இன்றி வீழ்த்துகிறான்.

**வ்யாக்யானம்** - (தன் தெய்வநிலை) தன்னுடைய அப்ராக்ருதமான ஸ்வாபாவத்தை. (உலகில்) இதுக்கிட்டுப் பிறவாத ஸம்ஸாரத்திலே. (புக உய்க்கும்) ப்ரவேசிப்பிக்கும் (அம்மான்) அபேக்ஷாநிரபேக்ஷமாக ஸம்ஸாரிகளுக்குத் தன் படிகளை வெளியிடுகைக்கு வேண்டும் ப்ராப்தி சொல்லுகிறது. பரமபதத்திலே நடையாடக்கடவ ஸ்வபாவத்தை ஸம்ஸாரிகளுக்குத் தெரிவித்தது, அங்குள்ளாரோடு உள்ள ப்ராப்தி இங்குள்ளாரோடும் ஒத்திருக்கையாலே. தூத்ய ஸாரத்யங்களைப் பண்ணித் தன் படியைத் தெரிவித்து இச்செயலாலே லோகத்தை எழுதிக் கொண்டவன் என்றுமாம். (துயரமில் சீர்க்கண்ணன்) ஹேயப்ரத்யநீக கல்யாண குணங்களையுடைய க்ருஷ்ணன். (மாயன்) ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவன். (புகழ் துற்ற யான்) அவனுடைய கல்யாண குணங்களை நெருங்க புஜிக்கப் பெற்ற நான். (ஓர் துன்பமிலனே) அவன் தன் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தைக் கொண்டு இவ்வுடம்போடே அணையலாம்படி கிட்டுவானாயிற்ற பின்பு, நான் இச்சரீரத்தை விட்டு அங்கே போய் அவ்வுடம்போடே அணைவேன் என்றால், எனக்கு அவன் அருமைப்படுத்துமோ?

**விளக்கம்** - (தன் தெய்வநிலை) - இந்த உலகின் ஸம்பந்தம் இல்லாதபடியான தனது தன்மையை. (உலகில்) - இதற்கு ஸம்பந்தம் இன்றியுள்ள ஸம்ஸாரத்தில், (புக உய்க்கும்) - புகும்படியாக. (அம்மான்) - அவர்கள் விரும்பாமல் இருந்தாலும், விரும்பினாலும் ஸம்ஸாரிகளுக்குத் தனது தன்மையை வெளிப்படுத்தவேண்டும் என்று அவனுக்குள்ள ஸம்பந்தம் கூறுகிறார். பரமபதத்தில் மட்டுமே வெளிப்படும் அவன் தன்மைகளை இங்கும் வெளிப்படும்படிச் செய்தது ஏனென்றால், அங்கு உள்ளவர்களுடன் இருக்கின்ற ஸம்பந்தமானது இங்கு உள்ளவர்களுடனும் உள்ளதால் ஆகும். தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் போன்ற தாழ்ந்த செயல்கள் மூலம் தனது இயல்பைத் தெரிவித்து, இந்தச் செயல்கள் மூலம் அனைவரையும் அடிமைப்படுத்தினான். (துயரமில் சீர்க்கண்ணன்) – தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ள திருக்கல்யாண குணங்கள் நிறைந்த க்ருஷ்ணன். (மாயன்) - வியக்கவைக்கும் குணங்களையும் செயல்களையும் கொண்டவன். (புகழ் துற்ற யான்) - அவனுடைய திருக்கல்யாண குணங்களை நெருக்கமாக நின்று அனுபவிக்கப் பெற்ற நான். (ஓர் துன்பம் இலனே) - அவன் தன்னுடைய திவ்யமங்கள திருமேனி கொண்டு என்னை இந்தச் சரீரத்துடன் சேர்த்து அணைத்துக் கொள்ளலாம்படியான நிலை உள்ளது; இவ்விதம் உள்ளபோது, இந்தச் சரீரத்தை விட்டு அங்கு சென்று, அங்கு கிட்டுகின்ற சரீரத்துடன் அணைத்துக்கொள்வேன் என்று கூறினால் எனக்கு அவன் கிட்டாமல் போவானோ?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 109)

**வ்யாக்யானம் -** ருத்ரன் ஏகாதசி மாஹாத்ம்யத்தைப் பரக்கச் சொல்லிக் கொண்டு போந்து, அத்திவஸத்திலே பாஷாண்டிகளுடனே ஸல்லாப ஸஹவாசாதிகள் பண்ணவொண்ணாதென்று ப்ரஸங்காத் சொல்லக் கேட்ட பார்வதியானவள், “ஆகில் நீர் அவர்களுடைய இந்த நிஷித்த சிஹ்நங்களை தரித்துக் கொண்டிருப்பானென்”, என்று கேட்க; “நமுசாத்யா மஹாதைத்யா: புரா ஸ்வயாம்புவேந்த்ரே” என்று தொடங்கி அந்த ராக்ஷஸர்கள் விஷ்ணு பக்தராயிருந்து வைத்தே, தத் பக்தரான இந்த்ராதிகளை பாதித்து அவர்களுடைய ஸ்தாநங்களை ஆக்ரமித்தவாறே, அவர்களுடைய ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் பக்கலிலே சென்று சரணம் புகுந்து தங்களுக்கு வந்த ஆபத்தை விண்ணப்பம் செய்யக் கேட்டு, “அந்த ராக்ஷஸர்கள், ஸ்வபக்தராய் ஸ்வாஜ்ஞாதிலங்கநம் பண்ணினாராகையாலே அவர்களுக்குத் தன்னளவிலே விப்ரபத்தியைப் பிறப்பித்து பின்பு அவர்களை ஸம்ஹரிக்கக் கடவோம்” என்று நினைப்பிட்டு, “இத்யா கர்ணயா ஹரேர் வாக்யம் தேவா நாம பயார்த்திநாம் தாந்ச்வ வ்ருத்தாந் விதி த்வாதமாமாஹ புருஷோத்தம:”; ஸ்ரீபகவாநுவாச “த்வஞ்ச ருத்ர மஹாபாஹோ மோஹநார்த்தம் ஸுரத்விஷாம் பாஷண்ட சரணம் தர்மம் குருஷ்வ ஸுர ஸத்தம தாமஸாநி புராணாநி ரசயஸ் வசதாந் ப்ரதி மோஹநாநிச சாஸ்த்ராணி த்வம் குருஷ்வ மஹாமாதே” என்று சொல்லிக் கொண்டு போந்து, “வம்சதாம்ச்ச மஹாமுநி: தவ சக்த்யா ஸமாவிச்ய குருஷ்வ ஜகதோ ஹிதம் கதயந் ஸேவதே விப்ரா: தாமஸநி ஜகத்ரயே புராணாநி ச சாஸ்த்ராணி த்வத் பரேணோப ப்ரமஹித: ததா பாசுபதம் சாஸ்த்ரம் த்வமேவ குரு ஸுவ்ரத கங்காளஞ்சைவ

பாஷண்ட மஹாசைவாதி பேதித: அவலம்ப்ய மதம் ஸம்யக் வேதபாஹ்யா த்விஜோத்தமா: பஸ்மாதி தாரணாஸ் ஸர்வே பபூவுஸ்தே ந ஸம்சய: த்வாம் பரத்வேந சம்ஸந்தி ஸர்வ சாஸ்த்ரேஷு தாமஸா: அஹமப்யவதாரேஷு த்வாஞ்ச ருத்ர மஹாபல தாமஸாநாம் மோஹநார்த்தம் பூஜயாமி யுகே யுகே மதமேததவஷ்டப்ய ரதந்த்யேவ ந ஸம்சய:" என்று இப்படி நியமித்து, "அவர்கள் விச்வஸிக்கைக்காக நீ அந்த சிஹ்நங்களை தரித்துக் கொண்டிருக்கவேணும்" என்று சொன்னவாறே, நான் தரித்துக் கொண்டு இப்படியேயிரா நின்றேன் என்று அவளுக்கு ப்ரத்யுத்தரம் சொல்லி.

**விளக்கம்** – ருத்ரன் ஏகாதசி நாளின் மேன்மையை விரிவாகப் புகழ்ந்தபடி இருந்தபோது, அந்த நாளில் பாஷாண்டிகளுடன் ஸம்பந்தம் கொள்ளக்கூடாது என்று உரைத்தான். இதனைக் கேட்ட பார்வதி ருத்ரனிடம், "அப்படியானால் நீவிர் அவர்களுடைய இத்தகைய தாழ்வான அடையாளங்களை ஏன் தரித்து நிற்கவேண்டும்?", என்று கேட்டாள். அப்போது ருத்ரன் பார்வதியிடம் உரைக்கத் தொடங்கினான். நமுசாத்யா மஹாதைத்யா: புரா ஸ்வயாம்புவேந்த்ரே - என்று தொடங்கி ராக்ஷஸர்கள் மஹாவிஷ்ணுவின் பக்தர்களாக இருந்தாலும், விஷ்ணுவின் பக்தர்களாக உள்ள இந்த்ரன் போன்ற பலரையும் தாக்கி, அவர்களுடைய இடங்களை ஆக்கிரமித்தனர். அப்போது அவர்கள் ஸர்வேச்வரனாகிய ஸ்ரீமந்நாராயணனிடம் சென்று சரணம் புகுந்து, தங்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை விளக்கி, தங்களைக் காக்குமாறு விண்ணப்பம் செய்தனர். இதனைக் கேட்ட ஸ்ரீமந்நாராயணன் அவர்களிடம், "அந்த ராக்ஷஸர்கள் நம்முடைய பக்தர்களாக இருந்தாலும், இப்போது தங்களுக்குள்ளேயே அஞ்ஞானத்தை வளர்த்தபடி உள்ளனர். ஆகவே அவர்களுக்கு மதி மயக்கத்தை உண்டாக்கி, அதன் பின்னர் அவர்களை நாம் அழிப்போம்", என்றான். மேலும் ஸ்ரீமந்நாராயணன், "இத்யா கர்ணயா ஹரேர் வாக்யம் தேவா நாம பயார்த்திநாம் தாந்ச்வ வ்ருத்தாந் விதி த்வாதமாமாஹ புருஷோத்தம:" என்று உரைத்தான். தொடர்ந்து, "த்வஞ்ச ருத்ர மஹாபாஹோ மோஹநார்த்தம் ஸுரத்விஷாம் பாஷண்ட சரணம் தர்மம் குருஷ்வ ஸுர ஸத்தம தாமஸாநி புராணாநி ரசயஸ் வசதாந் ப்ரதி மோஹநாநிச சாஸ்த்ராணி த்வம் குருஷ்வ மஹாமாதே", என்று தொடங்கி, "வம்சதாம்ச்ச மஹாமுநி: தவ சக்த்யா ஸமாவிச்ய குருஷ்வ ஜகதோ

ஹிதம் கதயந் ஸேவதே விப்ரா: தாமஸநி ஜகத்ரயே புராணாநி ச சாஸ்த்ராணி த்வத் பரேணோப ப்ரமஹித: ததா பாசுபதம் சாஸ்த்ரம் த்வமேவ குரு ஸுவ்ரத கங்காளஞ்சைவ பாஷண்ட மஹாசைவாதி பேதித: அவலம்ப்ய மதம் ஸம்யக் வேதபாஹ்யா த்விஜோத்தமா: பஸ்மாதி தாரணாஸ் ஸர்வே பபூவுஸ்தே ந ஸம்சய: த்வாம் பரத்வேந சம்ஸந்தி ஸர்வ சாஸ்த்ரேஷு தாமஸா: அஹமப்யவதாரேஷு த்வாஞ்ச ருத்ர மஹாபல தாமஸாநாம் மோஹநார்த்தம் பூஜயாமி யுகே யுகே மதமேததவஷ்டப்ய ரதந்த்யேவ ந ஸம்சய:" என்று உரைத்து, "அவர்கள் நம்புவதற்காக நீ அந்த அடையாளங்களைத் தரித்தபடி இருக்கவேண்டும்", என்று என்னிடம் கூறினான். இதனால்தான் நான் அவற்றை அணிந்தபடி இவ்விதம் உள்ளேன் என்று பார்வதிக்குப் பதில் உரைத்தான்.

**வ்யாக்யானம் –** "ப்ரதமம் ஹிமையைவோக்தம் சைவம் பாசுபதாதிகம் மத் சக்த்யாவேசிதைர் விப்ரை: ஸம்ப்ரோக்த்தாநி தத: பரம் மாயாவாதமசச் சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்யமுச்ச்யதே மயைவகதிதம் தேவி கலை ப்ராஹ்மண ரூபிணா அபார்த்தம் ச்ருதி வாக்யாநாம் தர்சிதம் லோக கர்ஹிதம் கர்ம ஸ்வரூபவ த்யாஜ்யம்யத் அத்ரைவ ப்ரதிபாத்யதே ஸர்வ கர்ம பரிப்ரஷ்டம் விகர்மஸ்த்தம் ததுச்யதே பரேச ஜீவயோரைக்யம் மயாத் ப்ரதிபாத்யே ப்ரஹ்மணோப்ய பரம்ரூபம் நைர்குண்யம் வக்ஷ்யதே மயா ஸர்வஸ்ய ஜகதோ பார்த்த மோஹநார்த்தம் கலௌ யுகே வேதார்த்தவந் மஹா சாஸ்த்ரம் மாயாவாதமவைதிகம் மயைவ வக்ஷ்யதே தேவி அஸ்தாம் நாச காரணாத்" என்ற பின்பு ருத்ரன்தானே சொன்னான் என்று பாத்மோத்தர கண்டத்திலே உமா மஹேச்வர ஸம்வாதத்திலும் பரக்கச் சொல்லப்பட்டதிறே. இப்படி பாஹ்ய ஸமயங்களையும் குத்ருஷ்டி ஸமயங்களையும் எடுத்தது ஸாங்க்யர், யோகிகள், பாட்டர், ப்ரபாகரர், ஏகாயனர் என்கிற ஐவருக்கும் உபலக்ஷணம். ஈட்டுக்காரர் இவ்வைந்து மதங்களையும் எடுத்தாரிறே அவர்களோடொக்க.

**விளக்கம் -** ப்ரதமம் ஹிமையைவோக்தம் சைவம் பாசுபதாதிகம் மத் சக்த்யாவேசிதைர் விப்ரை: ஸம்ப்ரோக்த்தாநி தத: பரம் மாயாவாதமசச் சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்யமுச்ச்யதே மயைவகதிதம் தேவி கலை ப்ராஹ்மண ரூபிணா அபார்த்தம் ச்ருதி வாக்யாநாம் தர்சிதம் லோக கர்ஹிதம் கர்ம ஸ்வரூபவ

த்யாஜ்யம்யத் அத்ரைவ ப்ரதிபாத்யதே ஸர்வ கர்ம பரிப்ரஷ்டம் விகர்மஸ்த்தம் ததுச்யதே பரேச ஜீவயோரைக்யம் மயாத் ப்ரதிபாத்யே ப்ரஹ்மணோப்ய பரம்ரூபம் நைர்குண்யம் வக்ஷ்யதே மயா ஸர்வஸ்ய ஜகதோ பார்த்த மோஹநார்த்தம் கலௌ யுகே வேதார்த்தவந் மஹா சாஸ்த்ரம் மாயாவாதமவைதிகம் மயைவ வக்ஷ்யதே தேவி அஸ்தாம் நாச காரணாத் - என்று தொடர்ந்து ருத்ரன் தானே உரைத்தான் என பாத்மோத்தர கண்டத்தில் உமா மஹேச்வர உரையாடலில் விரிவாக உரைக்கப்பட்டதும் காணலாம். இவ்விதம் வேதங்களுக்குப் புறம்பாக உரைக்கும் தாழ்ந்த மதங்களை ஏன் எடுக்கவேண்டும் என்றால் ஸாங்க்யர், யோகிகள், பாட்டர், ப்ரபாகரர் மற்றும் ஏகாயநர் ஆகிய மற்ற ஐந்து மதங்களுக்கும் உபலக்ஷணமாகவே ஆகும். ஈட்டிலும் இந்த ஐந்து மதங்கள் கூறப்பட்டது காணலாம்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

...தொடரும்